திராவிடன்

R.T.ARASU

ஆசிரியர்
என்.வி.நடராசன்

காங்கிரசாட்சியின் அடக்குமுறை!

கருணாநிதி-என்.வி.என். சிறையில்!

21—12—63
8 பக்கங்கள்

வார இதழ்

16 காசு.

தலையங்கம்

மாலை 17. 21—12—63 மலர். 21

பாராளுமன்றத்தில் கழகப் பணி!

——ஃ——

சென்னை மாநகரம் "எ" பிரிவாக உயர்த்தப்படவேண்டும் என்ற திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம், தனது மாநாடுகள், பொதுக்குழுக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள், கழக ஏடுகள் ஆகியவைகளின் வாயிலாக எடுத்துக்கூறி வந்திருப்பதை நாடறியும்.

அதுமட்டுமல்லாமல் அறிஞர் அண்ணா அவர்கள் மூன்று திங்களுக்கு முன் சென்னை மாநகராட்சி மன்ற நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுகையில், "சென்னை மாநகரம் இதுவரை 'எ' பிரிவு நகரமாக உயர்த்தப்படாமலிருப்பதைக் கண்டித்தும் 'எ'பிரிவு நகரத்திற்கான எல்லாத் தகுதிகளும் சென்னைக்கு உண்டு என்பதையும் ஆதாரத்துடன் விளக்கியும் பேசியிருக்கிறார்கள்.

அண்மையில், பாராளுமன்றக் கூட்டத்தில், கழகத்தலைவர் தோழர். கி. மனோகரன் அவர்கள், சென்னை 'எ'பிரிவு நகரமாக்கப் படவேண்டும் என்பதை வலியுறுத்தி, தீர்மானம் கொண்டுவந்ததுடன், அதற்கு மற்ற எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்பையும் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

அதற்கேற்ப, இப்போது சென்னை 'எ'பிரிவு நகரமாக உயர்த்தப்பட்டிருப்பது கண்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். இம்முயற்சியில் ஈடுபட்ட கழகப் பாராளுமன்றத் தி. மு. கழக உறுப்பினர்கள்—அதற்கு ஆதரவு தந்த பிற கட்சியினரையும் மனமாரப் பாராட்டுகிறோம்.

என்.வி.நடராசன்

மு. க., என். வி. என். கைது:

நாவலர் கண்டன அறிக்கை

——...——

பொருளாளர் மு. கருணாநிதி, அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர் கைது செய்யப்பட்டது பற்றி நாவலர் நெடுஞ்செழியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

18—12—63 அன்று மதுரையில், கழகத்தின் முன்னணியினர் ஏழு பேர்கள் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார்கள் என்ற செய்தியையும், 19—12—63 அன்று சென்னையில் கழகத்தின் பொருளாளர் கலைஞர் கருணாநிதி அவர்களும், அமைப்புச் செயலாளர் நண்பர் என். வி. நடராசன் அவர்களும் கைது செய்யப்பட்ட நிகழ்ச்சியையும் கண்டு திடுக்குற்றேன்.

மதுரையில் 15—12—63 அன்று நடைபெற்ற சட்ட எரிப்புக் கிளர்ச்சியை இவர்கள் தூண்டினார்கள் என்ற குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்கள் என்ற செய்தி வியப்பு அளிக்கிறது. இந்தித் திணிப்பை எதிர்க்கும் அறிகுறியாகத் தி. மு. கழகத்தினர் நடத்தும் சட்ட எரிப்புக் கிளர்ச்சியும், மறியல் கிளர்ச்சியும் அமைதியாகக் கழக பொதுச்செயலாளர் அறிவித்தபடி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மதுரை சட்ட எரிப்புக் கிளர்ச்சியில் ஈடுபட தோழர் எஸ். முத்து அவர்கள் உள்ளிட்ட ஐவர் முன்வந்தனர். அந்த ஐவர் மட்டுமே அந்தக் கிளர்ச்சியில் ஈடுபட தலைமைக்கழகத்தால் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இந்தச் செய்தி திட்டவட்டமாகவும், தெளிவாகவும் செய்தித்தாள்களில் அறிவிக்கப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் சென்னை மறியல் கிளர்ச்சிகளுக்குப் பார்வையாளராகச் சென்றிருந்ததைப்போன்று 15—12—63-இல் மதுரைக்கும் பார்வையாளராகச் சென்றிருந்த தோழர்கள் மு. கருணாநிதி என். வி, நடராசன், காவேரிமணியன், பி. எஸ். மணியம், திருப்பதி முதலானவர்கள் மூன்று நாட்களுக்குப் பிறகு கைது செய்யப்பட்டிருப்பது வேடிக்கையாக இருக்கிறது. மாநில முதலமைச்சர் அவர்கள் 16—12—63-ல் செய்தித்தாள் நிருபர்களிடம் வெளியிட்ட கருத்திற்குப் பிறகு, காவல் துறையினர் இத்தகைய அடக்குமுறை நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனரோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. கழகத் தலைவர்களில் முன்னணியினரைக் காவலில் தொடர்ந்துவைப்பதன் மூலம், மாநகராட்சி மன்றத் தேர்தலையும், நகராட்சி மன்றத் தேர்தல்களையும், காங்கிரசுச் சாதகமாக ஆக்கிக்கொள்ள, இப்படிப்பட்ட சூழ்ச்சிகளில் ஆட்சியினர் ஈடுபட்டுள்ளனரோ என்றும் கருதவேண்டியிருக்கிறது.

காங்கிரசு ஆட்சியினரின் இந்த அக்கிரம யதேச்சாதிகாரப் போக்கு, சனநாயகவாதிகள் அனைவராலும் மிக வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இந்த அநீதியை எதிர்த்து நீதிமன்றத்தில் வாதாடி, நீதியைப் பெறுவது என்று தலைமைக் கழகம் முடிவு எடுத்து அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

கலைஞர் கருணாநிதி, என். வி. என். கைது!

——(0)——

கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்களும், அமைப்புச் செயலாளர் என். வி, நடராசன் அவர்களும் 19—12—63 அன்று அவரவர் இல்லத்தில் கைது செய்யப்பட்டனர்.

மதுரையில் இருந்து வந்த போலீஸ் அதிகாரிகள் இருவரையும் கைதுசெய்து அன்று மாலை 7-30 மணியளவில் சென்னை எழும்பூர் இரயில் நிலயம் அழைத்துச்சென்று, திருவனந்தபுரம் துரிதவண்டியில் மதுரை அழைத்துச்சென்றனர்.

மு. க. அவர்களும் என். வி. என். அவர்களும் கைது செய்யப்படுவர் என்று மதுரை நாளிதழ்களிலும், சென்னை இதழ்களிலும் செய்தி வெளியாகியிருந்தன.

ஆகவே பெரும்பாலான கழகத் தோழர்கள் மு. க., என். வி. என். ஆகியோரது இல்லங்களுக்கு முன்பாகக் குழுமிவிட்டனர்.

மு. க. அவர்கள் கைது செய்யப்படும்போது, நாவலர் நெடுஞ்செழியன், ப. உ. சண்முகம், கே. ஆர். ராமசாமி, நீலநாராயணன், அ. பொ. அரசு, எஸ். ராகவானந்தம், பவளவண்ணன் ஆகியோர் உரையாடிக்கொண்டிருந்தனர். கருணாநிதி அவர்கள் கைது செய்யப்பட்டதும், கூடியிருந்த தோழர்கள் வழியனுப்ப அவர் முகமலர்ச்சியுடன் போலீஸ் அதிகாரிகளுடன் புறப்பட்டார்.

பின்னர் சிறிது நேரத்திற்கெல்லாம் போலீஸ் அதிகாரிகள் என். வி. நடராசன் அவர்கள் இல்லத்திற்கு வந்தனர். போலீசார் கைது செய்ததும், கூடியிருந்த தோழர்கள் மலர் மாலையணிவித்து, "அண்ணா வாழ்க" என்ற வாழ்த்தொலியுடன் வழியனுப்பி வைத்தனர்.

தோழர்கள் நீலநாராயணன், அ. பொ. அரசு, கே. காமாட்சி, டபிள்யூ. பி. பி. சுந்தரம், கே. எஸ். தினகரன், "முரசொலி" அலுவலகத் தோழர்கள் மோகன், அமிர்தம், சௌந்தர் மற்றும் கழகத் தோழர்கள் என். வி. என். அவர்களது இல்லத்தில் கூடியிருந்தனர்.

பின்னர் இருவரும் சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பின்னர் அங்கிருந்து இரவு 7-40 மணிக்கு எழும்பூர் இரயில் நிலயம் அழைத்துச் செல்லப்பட்டு, திருவனந்தபுரம் துரிதவண்டியில் மதுரை அழைத்துச் செல்லப்பட்டனர்.

எழும்பூர் ரயிலடியில், கொள்கை பரப்புச்செயலாளர் சத்தியவாணிமுத்து, நீலநாராயணன், அ. பொ. அரசு, டி. கே. கபலி, சு. பாலன், இரா. சம்மந்தம், டபிள்யூ. பி. பி. சுந்தரம், கே. எஸ். தினகரன், கே. ஏ. கிருட்டினசாமி, என். வி. என். சோமு, அமிர்தம் ஆகியோரும் மற்றும் ஏராளமான தோழர்களும் வழியனுப்பி வைத்தனர்.

பேராசிரியர் அன்பழகன் அணிக்கு 6—மாதம் கடுங்காவல்!

இத்திங்கள் 13-ம் நாள் தென்னக இரயில்வே அலுவலகம் முன்பு இந்தி எதிர்ப்பு அறப்போர் மறியல் புரிந்த பேராசிரியர் க. அன்பழகன், வ. மணிவண்ணன், இரா. இராமானுசம், கோ. நாகராசன், ஆர். தங்கராசன் ஆகியோருக்கு 15—12—63 அன்று 6 மாதக் கடுங்காவல் தண்டனையளிக்கப்பட்டது.

"நீதிமன்றத்தின் தீர்ப்பை தமிழன்னைக்கு நாங்கள் செலுத்த வேண்டிய காணிக்கை என்று கருதி ஏற்கிறோம்" என்று கூறி பேராசிரியர் அணியினர் சிரித்தமுகத்துடன் தண்டனையை ஏற்றனர்.

அங்கம் 5

காட்சி 2 தொடர்ச்சி!

சார்: கருமை மேகமே நீ மழையாக மாறிப் பெய். கடவுட்கள் கூடக் கதறிய மூவர் என்று கூறுகிறேன் நான்.

கிளியோ: இது என்னை வருத்தத்தி லாழ்த்துகிறது. அவள் முதலில் அண் டோனியைச் சந்தித்தால் அவர் அவளை வேண்டுவார். ஒரு வேளை முத்தமிட்டா லும் இடுவார். நானும் விரைவாகச் செல் கிறேன்—வா என் அருமைப் பாம்பே!

[ஒரு பாம்பை எடுத்து அவள் தன் மார்பின் மீது விட்டுக்கொள்கிருள்]

உன்னுடைய கூர்மையான பற்களால் என்னுடைய உயிரை எடுத்துவிடு. தடுப் பவர். எவருமிலர் ஓ! விஷம் கொண்ட முட்டாளே! கோபம் கொள்! சீறு கடி! நீ பேச முடிந்தால் 'சீசர் கழுதையே கிளியோபாட்ராவைத் தனியாக விட்ட வனே பார் முடிவை' என்று பே .

சார்: ஓ! கிழக்கின் விண்மீனே!

கிளியோ: அமைதி! அமைதி! பாலூட்டும் பாவையை படுத்துறங்க வைக்கும் பால கனைப் போன்று என்னை உறக்கத்திலாழ்த் தும் பாம்புக் குழந்தையைப் பார்.

சார்: ஐயோ! ஐயோ!

கிளியோ: மதுவின் சுவையைப் போன்று, காற்றைப்போல மெல்லிய மிருதுவான ஓ! அண்டோனி! இல்லை. இதோ உன் னையும் விட்டுக்கொள்கிறேன்.

[மற்றொரு பாம்பை எடுத்து தன் பஞ்சு போன்ற கைகளில் விட்டுக்கொள்கிருள்]

என்ன நான் வாழவேண்டுமா?—

[படுக்கையில் விழுந்து மடிகிருள்]

சார்: இந்தக் கொடிய உலகிலா?—சரி. இறுதி வணக்கம் தலைவி!—சாவே நீ பெருமையுடன் பேசு'! உன்னுடைய கொடிய கரங்களில் ஈடு இணையற்ற துடி யிடையாள் ஒருவள் சிக்கிவிட்டாள் அல்லவா? ஓ, சன்னல்களே! மூடிக் கொள்ளுங்கள். நானும் வருகிறேன் தலைவி இனி எனக்கு என்ன வேலை?

[காவலன் ஓடிவருகிருன்]

கா. 1: எங்கே தலைவி?

சார்: மெதுவாகப் பேசு. அவரை எழுப்பி விடாதே!

கா. 1: சீசர் அனுப்பியிருக்கிருர்.

சார்: தாமதாக வந்த தூதனே,

[அவளும் ஒரு பாம்பை எடுத்து விட் டுக்கொண்டு]

வா, பாம்பே! என்னையும் என் தலைவி யினிடம் அனுப்பு.

கா. 1: ஓ! வாருங்கள். எல்லாம் முடிந்து விட்டது, சீசருக்கு ஏமாற்றம்.

கா. 2: அதோ டோலாபெல்லா சீசரிட மிருந்து வருகிருர் கூப்பிடு.

கா. 1. என்ன வேலை இது சார்மியான். நன்ருகயிருக்கிறதா உனக்கு.

சார்: நன்ருகத்தானிருக்கிறது. எத்துணை பெரும் அரசர்களின் வழியாக வந்த வண்ணத் தாமரை, வடிவழகி, எகிப்து நாட்டு எழிலரசி கிளியோபாட்ராவுக்கு ஏற்ற சாவுதான், ஆ! காவலா!

[விழுந்து சாகிருள்]

[டோலாபெல்லா ஜழைகிருன்]

டோலா: என்ன நடக்கிறது இங்கே?

கா. 2: எல்லோரும் மடிந்துவிட்டார்கள்.

டோலா: சீசர், தங்கள் எண்ணங்கள் அவர்களை அப்படி தொட்டு இருக்கிறது. தாங்கள் விரும்பிய, எண்ணி வந்த காரி யம் எப்படி நடந்திருக்கிறது என்பதைக் காணத் தாங்களே வருகிறீர்கள்,

[வழி வழி 'சீசர் வருகிருர்' என்று ஒரு குரல் கேட்கிறது. சீசரும், அவரது ஆட் களும் வருகின்றனர்.]

டோலா: ஓ! ஐயா! நீங்கள் சந்தேகித் தது நிறைவேறிவிட்டது. நீங்கள் பயந்த படியே நடந்துவிட்டது.

சீசர்: வீரமுடன் இறந்தாள்! அவள் நம் முடைய உதவியேதுமின்றி அவளுடைய முடிவை அவளாகவே ஏற்றுக்கொண்டு முடித்துவிட்டாள். எப்படி அவர்கள் இறந்தார்கள். இரத்தம் ஏதும் காணுமே?

டோலா: அவர்களுடன் கடைசியில் இருந்தவர்கள் யார்?

கா. 1: ஒரு கிராமத்தான். இந்தக் கூடை யில்தான் அத்திப்பழம் கொண்டு வந் தான்.

சீசர்: விஷப்பழங்களா?

கா. 1: ஓ! சீசர் சார்மியான் சிறிது நேரம் வரை உயிரோடிருந்தாள். நன்ருக இருந் தாள். நின்றுக்கொண்டுதான் பேசினுள். நன்ருகப் பேசினுள். பின்னர் திடீரென்று விழுந்து இறந்துவிட்டாள்.

சீசர்: ஓ! கௌரவமான பலவீனம். அவர் கள் நஞ்சு ஏதேனும் அருந்தியிருந்தால் அது வெளி அறிகுறி காட்டியிருக்குமே! சிறிதும் கலக்கமற்று அவள் எவ்வளவு ஆனந்தமுடன் உறங்குகிருள், தூக்கத் தில் மற்றொரு அண்டோனிக்காக மாய வலை பின்னும் மாயாவதி போன்று.

டோலா: இதோ. அவள் மார்பில் ஒரு துளி இரத்தமும், சிறிது காயமும் காணப் படுகிறது. அவள் கையில் கூட.

கா. 1: இந்த அத்திப்பழத்தின் இலைகளை பாருங்கள்.

சீசர்: சரி. அவள் இறந்துவிட்டாள். அவள் சுலபமாக தொந்திரவின்றி இறப் பதற்கு புது வழிகள் கண்டுபிடித்துக் கொண்டிருப்பாள் என்று அவள் மருத்து வர் கூறினுர்—அவளுடைய படுக்கையை எடுங்கள். அவள் தோழிகளையும் தூக் கிக் கொள்ளுங்கள். அவளையும் அண் டோனியின் அருகில்தான் புதைக்க வேண்டும். இவர்களைப் போல் புகழ் பெற்ற காதல் ஜோடிகள் இப்பூவலகில் இல்லை என்பதுபோல் அவர்க நடைய சமாதிகளை ஆடம்பரமாக அலங்கரிக்க வேண்டும். இத்தகைய பெரிய காரியங் கள் காரணகர்த்தாக்களை நிச்சயம் பாதிக் கும், அவர்களுடைய கதை அவனுடைய

(6-ம் பக்கம் பார்க்க)

மூலம் சேக்ஸ்பியர்

தமிழில் இரா. மதனகோபால் பி.காம்., டி.ஐ.பி.



கடின சித்தம் படைத்தவர்களே; கடைசியில் வெற்றிக்குரியவர்கள்!

நீதிமன்றத்தில் மதியழகன் வாக்குமூலம்!

10—12—63 அன்று சென்னை பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தி. மு. க. தலைமை நிலையச் செயலாளர் திரு. கே. ஏ மதியழகன் பி. ஏ. எம். எல். ஏ. அவர்கள் அளித்த வாக்கு மூலம் கீழே தரப்படுகிறது.

ஃ

பெருமதிப்பிற்குரிய நீதிபதி அவர்களே!



தமிழ்நாடு அரசு, என் மீதும் நான் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றும் ஆயிரம் விளக்குத் தொகுதியைச் சேர்ந்த எனது நண்பர்கள் மோகனசுந்தரம், இரா. நடராசன், வி. பி. ராமன், சி. ஆர். கோலப்பா ஆகியோர் மீதும் தடையுத்தரவை மீறி சட்ட விரோதமான முறையில் கூடியதாகவும், அரசாங்க ஊழியர்களை வழிமறித்ததாகவும், இ. பி. கோ. 143-வது பிரிவின் கீழும் கிரிமினல் திருத்தச்சட்ட 7-வது பிரிவின் கீழும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

வாக்குமூலத்தின் நோக்கம்!

இந்தக் குற்றச்சாட்டுகளை மறுப்பதோ, எதிர் வழக்காடுவதோ, அல்ல, தங்கள் திருமுன் சமர்ப்பிக்கும் இந்த வாக்குமூலத்தின் நோக்கம்.

எங்கள் கழகத்தின் கட்டளைப்படி, தங்கள் மேலான தீர்ப்பின் மூலம் என்ன தண்டனை அளிக்கப்பட்டாலும் ஏற்றுக்கொள்வது என்பதற்கு உடன்பட்டே வந்துள்ளோம். ஆனால் நாங்கள் மேற்கொண்ட செயலுக்கான காரணத்தையும் நிர்பந்தத்தையும் தங்கள் மேலான கவனத்திற்குக்கொண்டு வருவதற்கான ஓர் வாய்ப்பாகவே இதனைக் கொள்கிறோம்.

சிறப்புமிக்க வாய்ப்பு!

இந்தி எதிர்ப்பு அறப்போரின் இரண்டாவது கட்டமான மத்திய அரசாங்க அலுவலகங்கள் முன் செய்யப்படும் மறியல் போராட்டம் டிசம்பர் 2-ந் தேதி என் தலைமையில் துவங்குமென அக்டோபர் திங்கள் நுங்கம்பாக்கத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் எனது அண்ணனும், தலைவரும், திராவிட மக்களின் வழிகாட்டியுமான அறிஞர் அண்ணா அவர்கள் பிரகடனப் படுத்தினார்கள். அதனைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக் குழு டிசம்பர் 2-ந் தேதி காலை 10 மணியளவில் மவுண்ட்ரோடு போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் அலுவலக தலைவாயிலின் முன் நானும் மேலே கண்ட எனது நண்பர்கள் நால்வரும் மறியல் செய்வது என முடிவு செய்தது. இந்தப் பெரும் சிறப்பையும், வாய்ப்பையும் எனக்கு அளித்த அறிஞர் அண்ணா அவர்களுக்கும் தலைமைக் குழுவினருக்கும் எனது இதயம் கலந்த நன்றியை தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

கைதானோம்!

டிசம்பர் 2-ஆம் நாள் 10 மணி அளவில், நாங்கள் மறியலுக்காக மவுண்ட்ரோட்டில் பிரவேசித்த போது தபாலாபீஸ் வட்டாரம் ஒரே போலீஸ் மயமாகக் காட்சி அளித்தது. ரோட்டின் இரு பக்கங்களிலும் 10 அடிக்கு ஒருவர் வீதம் இரும்புத் தொப்பி போலீஸ் காவலாக நின்றிருந்தார்கள். 15-க்கு மேற்பட்ட குதிரைகளில் போலீஸ் படையினர் ரோந்து சுற்றியவண்ணம் இருந்தனர். கண்ணீர்ப் புகை குண்டுகளுடன் ஓர் போலீஸ் படை தயாராக நின்றிருந்தது. துப்பாக்கி ஏந்திய போலீசும், ஏராளமான லாரிகளில் காக்கி உடைக்காரரும் தென்பட்டனர். ஏதோ இராணுவ நடவடிக்கைக்குத் தயாராகக் காத்திருப்பது போல் சூழ்நிலை இருந்தது. போலீஸ் வேலியைத் தாண்டி, பல்லாயிரக் கணக்கான மக்கள் குழுமியிருந்தனர். நாங்கள் காரிலிருந்து இறங்கி அலுவலகத்தின் தலைவாயிலில் மறியல் செய்யத் துவக்கினோம். 2 நிமிடங்களில் கைது செய்யப்பட்டோம்.

கடந்த ஆண்டு ஜூலைத் திங்கள் இதே வழக்குமன்றத்தில், தங்கள் திருமுன் என்னுடன் நிறுத்தப்பட்ட நால்வரில் கோ. சு. மணி என்ற ஆயிரம் விளக்குப் பகுதி நகரமன்ற உறுப்பினன் இன்று உயிரோடு இல்லை. தாங்கள் விதித்த தண்டனை முடிந்து என்னோடு அவன் வீடு திரும்பவில்லை. ஈவு இரக்கமற்ற அரசாங்கத்தின் சிறைச்சாலை அவனை விழுங்கிவிட்டது. எனது அணியிலே ஏற்பட்டுவிட்ட இந்த வேதனை நிறைந்த சம்பவத்திற்குப் பிறகும் தொடர்ந்து அதே பணியில் சலனமில்லாமல் ஈடுபட்டுள்ளேன். துரதிரஷ்டம் மிக்க எனது அணியைப் புறக்கணிக்காமல் எந்த ஆயிரம் விளக்குத் தொகுதியிலிருந்து கோ. சு. மணி புறப்பட்டுக் களபலியானானோ அதே வட்டாரத்தைச் சேர்ந்த மோகனசுந்தரம், நடராசன், வி. பி. இராமன், கோலப்பா என்ற நான்கு தோழர்களும் தைரியத்துடனும் வீரத்துடனும் எனது அணியைச் சிறப்பித்துள்ளனர்.

தமிழ் நாட்டு சட்டமன்றத்தில் தமிழ் உட்பட பதினான்கு தேசிய மொழிகளும் மத்திய அரசின் ஆட்சிமொழியாக ஆக வேண்டுமென்ற தனி நபர் தீர்மானம் கொண்டு வந்தேன். ஆட்சிப் பொறுப்பில் இருப்போர் தமிழ் வரையிலாவது மத்திய ஆட்சி மொழி ஆக்க முயற்சித்து இருக்கலாம். ஆனால், அவர்கள் தங்கள்

கடைசித் தமிழனின் கடைசிச் சொட்டு ரத்தம் இருக்கும்வரை இந்தப்போராட்டம் நடந்தே தீரும்!

அண்ணாவின் தலைமையில் நலம் சித்திக்கும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டுள்ளோம்!

ஆற்றலை எனது தீர்மானத்தைத் தோற்கடிக்கத்தான் உபயோகித்தனர்.

கடந்த இருபது நாட்களுக்கு முன் டில்லி சட்டசபையில் எனது தொகுதியைச் சேர்ந்த வாக்காளரும் தமிழ் நாடு முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் பிரதிநிதியாக உள்ள திருப்பெரும்புதூர் தொகுதியை உள்ளடக்கிய பாராளுமன்ற உறுப்பினரான திரு. சிவசங்கரன் அவர்கள் தமிழில் பேச முயன்றபோது இந்தி வெறியர்களால் கூச்சலிட்டுத் தடுக்கப்பட்டார். திரு. இராசாராம் என்ற மற்றோர் உறுப்பினர் நேருவைக் குறுக்கிட்டு, நீர் இந்தியை வற்புறுத்துவதானால் இந்த உறுப்பினர் பதவி எங்களுக்கு எதற்கு? என்று கண்டனம் தொடுக்க வேண்டிய அளவுக்கு நிலைமை முற்றியது. நான்கு நாட்களுக்கு முன் சமஸ்கிருதம் மத்திய ஆட்சி மொழியாக வேண்டுமென்ற தீர்மானத்தை பட்டாச்சாரியா என்ற உறுப்பினர் கொண்டுவந்தபோது திராவிட முன்னேற்றக் கழகத்தை தவிர எதிர் குரல் இல்லை; தென்னகத்தின் இதய ஒலியை திரு. அரூர் முத்து என்ற தி. மு. க. உறுப்பினர்தான் எதிரொலித்தார்.

கடந்த ஒரு மாத காலமாக டில்லி பாராளுமன்றத்தில் திரு. மனோகரன் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், ஆற்றியுள்ள தொண்டை— இலட்சக்கணக்கான தமிழ்க்குடும்பங்கள் வாழ்த்திக் கொண்டுள்ளன. பெருந்தலைவர் நேருவின் வாக்குறுதி காற்றிலே கலந்துவிட்டது. நேரு இந்தி வெறியர்களின் சிறைக் கைதியாக மாறிவிட்டார். தமிழ் நாட்டின் அரசியல் தலைமை அரசியல் நிர்ணய சபை காலந்தொட்டே நமது நலன்களின் வைரிகளுக்கும் பகைவர்களுக்கும் உடந்தையாக மாறி விட்டது. ஓர் புறம் உதட்டளவில் இந்தி பேசாத மக்களுக்கு உத்திரவாதம்; மறுபுறம் வேகமாகவும் விரைவாசவும், இந்தியின் படையெடுப்பை பெருக்கிக்கொண்டே உள்ளது.

இந்தித் திணிப்பிற்கு இதோ ஒரு சான்று!

கட்டாயமாக இந்தி படித்தாக வேண்டும் என்று கோரும் உத்திரவு நகல் ஒன்றை இத்துடன் இணைத்துள்ளேன். இந்த நகல் பெயர் தெரியாத ஓர் மத்திய சர்க்கார் ஊழியரிடமிருந்து மறியலுக்கு முன் தினம் நான் தபாலில் பெற்றது. அதன் வாசகங்கள் வருமாறு :

"மத்திய அரசு ஊழியர்களின் இந்தி படிக்கின்ற நேரம், ஊழியம் புரியும் நேரமாகக் கருதப்படும். மத்திய அரசு ஊழியர்களனைவரும் இந்தி கட்டாயம் கற்றிருக்க வேண்டுமென்பதும், அப்படி கற்காமலிருப்பதும் இந்தி வகுப்புகளுக்குச் செல்லாமலிருப்பது என்பதும் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உட்பட்டது"

இந்த உத்தரவு நான்கு வருஷங்களுக்கு முன்பே உள்துறை அமைச்சரால் அனுப்பப்பட்டிருப்பதாகும்.

கடந்த ஒரு மாத காலமாக எனது மதிப்பிற்குரிய முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் பரிபாலனத்தின் எதேச்சாதிகாரம் தங்குத் தடையின்றி ஏகபோக உரிமையுடன் பவனி வருகிறது. சட்டம், அமைதி, ஒழுங்கு என்ற போர்வையின் கீழ் அடக்குமுறை வெட்ட வெளிச்சமாக, ஒளிவு மறைவின்றி கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. கொடுமைகள் மக்களை திணறடித்துக் கொண்டுள்ளன. நாட்டின் தலைமகன் அறிஞர் அண்ணாவும், அவரோடு அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவைக் கொளுத்த இருந்த அருமை நண்பர்கள் டி. எம். பார்த்தசாரதி, டி. கே. பொன்னுவேலு, வி. வெங்கா, கே. பி. சுந்தரம் ஆகியோரை அமைந்தகரை நெடுஞ்சாலையில் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களைக் கண்ணி வைத்துப் பிடிப்பது போல் கைது செய்தது. நாடெங்கும் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட திராவிட முன்னேற்றக் கழக வாலிப இரத்தினங்கள் பல்வேறுச் சிறைச்சாலைகளில் பூட்டப்பட்டனர்.

இ. பி. கோ. 151வது பிரிவை துஷ்பிரயோகம் செய்து அடக்குமுறை ஆயுதமாக ஏவியதை நீதிதேவன் சந்நிதானத்தில் முறையிட்டபோது சிறைக் கதவுகள் திறந்தன. இன்னும் நாற்பது நாட்களில் 30 இலட்சம் வாக்காளர்கள் கலந்துகொள்ளும் நகரமன்றத் தேர்தல்களை எதிரே நிறுத்திக் கொண்டு நிபந்தனையோடு கூடிய வாய்ப்பூட்டுச் சட்டம் அமுலில் உள்ளது. அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் தற்கால தமிழக அரசியல் நிலைமை பாராளுமன்ற ஜனநாயக முறைக்கு அபாய விளக்கமாகும்.

தமிழக முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் சாமர்த்தியம், சாதுர்யம், நிர்வாகத் திறமை, நீண்ட அனுபவம் பெற்றவராக இருக்கலாம். ஆனால் தமிழனின் மொழிப் பிரச்சினையில் அவரது அரசியல் விவேக சூன்யத்தை எதிர்கால வரலாறு பொறித்தே தீரும். அரசியல் வாழ்வின் அஸ்தமன பருவத்திலிருக்கும் முதுமை நிறைந்த நமது முதலமைச்சர் மீது எனக்குக் கோபமில்லை. அவருக்காக அனுதாபப்படுகிறேன்.

கோட்டை நாற்காலி சதமென்று கருதிக்கொண்டு வெளியில் உருவாகும் பிரளயத்தைக் காண மறுக்கிறார். தமிழன் இந்திக்கு எதிராக தொடுத்த போர் ஒரு தலைமுறை தழுவியது. பணிப்பெண்ணாக ஆச்சாரியார் அழைத்து வந்தது முதல் பட்டத்து அரசியாக நேருபிரான் சிம்மாதனத்தில் கொலு வீற்றிருக்கச் செய்தவரை இருபத்தைந்து கால போராட்டத்தை உள்ளடக்கியது.

சாது, சந்நியாசிகள், பெரியாரின் தொண்டர்கள், தமிழ்ப் புலவர்கள், தாய்மார்கள், கல்லூரி மாணவர்கள்—இப்படிப் பல்வேறு படையினர் அந்த அணியில் போராடியுள்ளனர். எல்லா அணியிலும் தானைத் தலைவராகத் தனது முத்திரையை பதித்துள்ள அண்ணாவின் நீங்காத தலைமை இந்த அறப்போருக்குக் கிடைத்துள்ளது. அது ஒன்றே இந்த அறப்போரின் வெற்றியை நிச்சயமாக்கி விட்டது.

தமிழர்களின் நியாய உணர்விலும் செயலாற்றலிலும் எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கிறது. இந்தி ஒழியும் வரை, தாய்த்தமிழ் அரியாசனம் ஏறும்வரை கடைசித் தமிழனின் கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும்வரை இந்தப் போராட்டம் நடந்தே தீரும். அடக்குமுறைகள் இன்றும் என்றும் வென்றதில்லை; நியாயங்கள் என்றும் வீண் போனதும் இல்லை. தென் வியட்நாமில் அடக்குமுறைக்கு எதிராக தங்கள் முறையீடுகள் பலிக்காததால் புத்தத் துறவிகள் தங்களைத் தாங்களே உயிர்த் தியாகம் செய்து உலக கவனத்தைக் கவர வழி தேடினார்கள். அதனை அந்த நாட்டு ஆணவ அரசு சொர்க்கம் செல்ல வழி கண்டுபிடித்து விட்டனர் என்று கேலிமொழி பேசி ஆர்ப்பரித்தது. அந்த ஆணவ அரசு இன்று பூண்டோடு அழிக்கப்பட்டுவிட்டது. புத்தத் துறவிகள் இலட்சியம் வீண் போகவில்லை.

கடின சித்தம் படைத்தவர்களே கடைசியில் வெற்றிக்குரியவர்கள். அந்த உறுதி, ஊக்கம், தியாக உணர்வு எங்களுக்கு நிரம்ப உள்ளது. அண்ணாவின் தலைமையில் தமிழ் நாட்டுக்குப் புது வாழ்வும் கோடிக்கணக்கான மக்களுக்கு நலமும் சித்திக்கப் போகிறது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளோம்.

அந்தப் பெருமையிலும் புகழிலும் பங்கு கொள்கிறவர்கள் என்ற முறையில் எந்தச் சிரமத்தையும், தியாகத்தையும் தங்கள் தீர்ப்பின் மூலம் அளிக்கும் எந்தத் தண்டனையையும் புன்முறுவலோடு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று கூறி தமிழ்நாட்டு மக்களுக்கும் மற்ற திராவிடச் சகோதரர்களுக்கும் சிரம் தாழ்த்தி வணக்கம் கூறி, இதனை அனுமதித்த தங்கள் மேலான கருணைக்கு நன்றி கூறிக் கொள்கிறோம்.

O

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

—(0)—

வணக்கம்.

நவம்பர் மாதம் முடிய உள்ள பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. உடன் அதற்கான தொகையை தவறாது அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

சென்னையை 'ஏ' பிரிவு நகராக்குக!

பாராளுமன்றத்தில் மனோகரன் தீர்மானம்!

விரைவில் முடிவு தெரிவிப்பதாக நிதியமைச்சர் டி. டி. கே. வாக்குறுதி!

"சென்னை நகரை 'ஏ' பிரிவு நகராக்க வேண்டும்" என்ற கோரிக்கையின் மீது விரைவில் முடிவு செய்யப்படும்" என்று மத்திய நிதியமைச்சர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி, மக்கள்சபையில் அறிவித்தார்.

13-12-63 அன்று டில்லி மக்கள் சபையில் பாராளுமன்ற தி. மு. க. தலைவர் கி. மனோகரன் அவர்கள் "சென்னை நகரை 'ஏ' பிரிவு நகராக்கவேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிந்தார்; இத்தீர்மானம், தி. மு. கழகத்தால் கொண்டுவரப்பட்டது; அவையில் எல்லா தரப்பிலிருந்தும் இத் தீர்மானத்திற்கு ஆதரவு கிடைத்தது.

முதலில் காங்கிரசு உறுப்பினர் டாக்டர் சீனிவாசன் இத் தீர்மானத்தை ஆதரித்தார்; இதனைத் தொடர்ந்து காங்கிரசு கட்சி செயலாளர் ரகுநாத்சிங் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் "விசுவாசப் பிரமாணத்தைத் தமிழில் ஏற்ற உறுப்பினர், தமிழகத்திற்கு உதவி செய்வதை ஆதரிந்தே தீருவார்" என்றார்.

கம்யூனிஸ்டு உறுப்பினர் அனந்தன் நம்பியார் பேசுகையில், "விலைவாசிகள் உயர்ந்துள்ள நிலையில் சென்னை நகரை மட்டுமல்லாது, இதர நகரங்களையும் 'பிரிவு' செய்யவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

டாக்டர் எம். எஸ். ஆனே, அலவன்சு நிர்ணயிப்பதில் பல முறைகேடுகள் இருப்பதாகவும், இதர சலுகை வசதிகளிலும் இவ்விதத் தெளிவின்மை காணப்படுவதாகவும் கூறியதை நிதி அமைச்சர் டி.டி.கே. ஒப்புக்கொண்டார்.

இதைக் குறிப்பிட்டு டி. டி. கிருஷ்ணமாச்சாரி பேசுகையில்:

டெல்லி நகரம் உயர்வு பெற்ற பொழுது அரசாங்க ஊழியர்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர்; ஆனால் அவர்கள் எவ்வளவு ஊதிய உயர்வு பெற்றாலும், அனைத்தையும் கடைக்காரர்கள் பறித்துக் கொள்வதை உணரத் தொடங்கினர். சில அறிவு பூர்வமான முறை இருக்கவேண்டும்" என்றார்.

தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில், திரு. இரா. செழியன் அவர்கள் குறிப்பிட்டதாவது:

மக்கள் தொகையைப் பொறுத்தும், வாழ்க்கைச் செலவுக் கணக்கு அடிப்படையிலும், சென்னை நகரை 'ஏ' பிரிவு நகர் ஆக்குவதற்கான அடிப்படைகள் உள்ளன. இவற்றை எண்ணிப் பார்த்து சென்னை நகரை 'ஏ' பிரிவு நகராக ஆக்கவேண்டும்"

சென்னை நகரின் மக்கள் தொகை 21 இலட்சத்திற்கு மேல் இருக்கிறது" என்று சென்னை நகர மக்கட் தொகைக் கணக்கெடுப்பு மேற்பார்வை அதிகாரி பி. கே. நம்பியார் குறிப்பிட்டிருப்பதாகத் திரு. மனோகரன் அவர்கள் எடுத்துக்காட்டினார்.

சென்னை நகரிலும், நகர்ப் புறத்திலும் பல தொழிற்சாலைகள் தோன்றியிருக்கின்றன; இதனால் மக்கள் தொகையும் அதிகரித்துள்ளது" என்றும் கூறினார்.

இறுதியில், இப்பிரச்சினையைப் பற்றிப் புரிந்துகொண்டுள்ள நிதியமைச்சரின் வாக்குறுதியை நம்பி தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வதாகத் திரு. கி. மனோகரன் கூறினார்.

புகழைப் போல், வீழ்ச்சியைப் போல், இரக்கத்தை உண்டாக்கும். அவர்களுக்காகத் துன்பப்படும் நாம் நம்மைத் தேற்றிக்கொள்ள வேண்டும். இங்கே அமைதியாக ஈமக்கிரியைகளை முடித்து. இந்த இணையற்ற காதலர்களுக்கு வீர வணக்கம் செலுத்திய பின்னர்தான் நம் படைகள் ரோமை நோக்கிப் புறப்பட வேண்டும். வா, டோலாபெல்லா இதை முடிக்கலாம்.

[போகின்றனர்]

முடிவுற்றது.

முடிவுரை

அகிலம் காணா அற்புதக் 'கூத்துக் கலைஞன்' ஷேக்ஸ்பியரின் "அண்டோனியும், கிளியோபாட்ராவும்" என்னும் 'நாடக' அமுதைச் சுவைத்து வந்தீர்கள்.

வாள்பிடித்து வையகத்தையே ஆட்டிவைத்து வீரத்தின் இலக்கணமாய், விவேகத்தின் இருப்பிடமாய் திகழ்ந்த மாவீரர்கள் எல்லாம் மங்கை நல்லாளின் மதிமுக ஒளியில் மோகனப் புன் சிரிப்பில், மயக்கந் தரும் அங்கங்களின் கவர்ச்சியில் மதியிழந்து அந்தக் கொஞ்சுமொழியாளின் பஞ்சு பாதத்தை வருடிக்கொண்டே இருக்கின்றனர். இறுதியில் தங்கள் பெயர், புகழ், வீரம், தீரம் எல்லாவற்றையும் இழந்து சாதாரணப் பிறவி போன்று இறந்துவிடுகின்றனர். இது ஒன்றும் சரித்திரத்திற்கு புதிதல்ல. அன்றிலிருந்து இன்றுவரை நடந்துவரும் 'சாதாரண' நிகழ்ச்சிதான்!

எகிப்து நாட்டு எழிலரசி, சரச சல்லாபமிடும் உல்லாசி காண்பவர் உள்ளத்தை சுண்டியிழுத்து சொக்கவைக்கும் சுந்தரி, அழகின் இலக்கணம் நான்தான் என்று அகம்பாவத்துடன் பகரும் பேரழகி, அவள்கால் சுட்டுவிரலைத் தொட்டுவிட்டால் கிட்டிவிட்டது எட்டாத இன்பம் என்று கொட்டாவி விட்ட இளைஞர்களின் கனவுலகக் காரிகை, தன்மானத்துடன் தலைநிமிர்ந்து நின்ற தமிழகத்தின் முத்துக்களை சாராயத்தில் போட்டுக் குடித்த சரசாங்கி கிளியோபாட்ராவிற்கு அடிபணிந்து, கால்வருடி: கைப்பொம்மையாகிவிட்ட மாவீரன் ஜூலியஸ் சீசர் அடிபணிந்த கட்டத்தை வைத்து ஓர் ஒப்பற்ற நாடகமாக வரைந்திருக்கிறார் பேரறிஞர் பெர்னாட்ஷா. அதே அழகிக்கு, பின்னர் மார்க் அண்டோனி அடிபணிந்து அவளே கதியென்று கிடந்ததைத்தான் ஷேக்ஸ்பியர் நாடகமாக உருவாக்கினார். அதைத்தான் நீங்கள் சுவைத்தீர்கள்.

படித்து முடித்த பெருவுள்ளங் கொண்ட தோழர்களை இந்த மொழிபெயர்ப்பு நாடகத்தைப்பற்றிய அவர்களின் விருப்பு வெறுப்பற்ற விமர்சனத்தை எனக்கு எழுதியனுப்ப வேண்டுகிறேன். நன்றி.

அன்பன்,

இரா. மதனகோபால்

1-2, சாமி முதலி தெரு
பெங்களூர்-1.



சிறை சென்ற மகனைப்பற்றி

தந்தை பாடும் சிந்து!

"ஆதிபத்தியம்—இந்தி ஏகாதிபத்தியம் தமிழகத்தில் நுழைகிறது—தடுத்திட வாரீர்; இச்சமயம் தவறிடின், தமிழன் வாழ்வு முறை அழியும்; மொழி அழிக்கப்படும்; கலையும் காணாமற் போய்விடும்; இந்தியக் கலை—கலாச்சாரம்—மொழி என்ற பெயரால் எங்கும்—எதிலும் இந்தி ஆதிக்கம் பெற்று, 'இந்து—இந்தி—இந்தியா' என்ற ஏக நிலையைப் பெற்றுவிடும்" என்று வருமுன்னர் எடுத்துரைத்து 'வருக, களம்நோக்கி!' என்று அன்பழைப்பு விடுத்தார் அண்ணா.

அண்ணா அவர்களின் அன்பழைப்பைக் கேட்டு, அன்னை மொழி காக்க அறப்போர்க்களம் சென்றான் காளை!

அவனைப் பெற்றெடுத்துப் பெயரிட்டு ஆளாக்கிய தந்தை, தன் மகன் களம்சென்று சிறைவாழ்வை மேற்கொண்டதைக் கண்டு, உளம்பூரித்து, களிகொண்டு மகிழ்கிறார்.

அண்ணா அவர்கள் உருவாக்கிய பண்புத் தந்தையின் 'சிந்தை'ப் படித்துப் பாருங்கள் :—

தெருவெல்லாம்தான் பிள்ளைகளிருக்கு—
தேடிச் சுகம்பெறத் தாவிடும் போக்கில்!
ஊரெல்லாம்தான் பிள்ளைகள் இருக்கு—
ஊமைகளாக்கி, உண்டு மகிழ்ந்து!
நான் பெற்றபிள்ளை நல்ல பிள்ளை,
நாடு காத்திட வல்லபிள்ளை,
பாடுபட்டெனைக் காத்திடும் தொல்லை,
'பழரசம்' என்று கருதிடும் பிள்ளை!
அந்தக் கடமை துறந்தும்கூட,
அன்னை மொழிகாக்கக் கிளம்பிவிட்டான்!
அறப்போர்க் களத்தில் நின்றுவிட்டான்!
நான் பெற்றபிள்ளை நல்லதுசெய்ய—
தொல்லைதந்திடும் சிறையும் சென்றான்!
துயரம் எழுந்தது, துரத்திவிட்டேன்!
பிள்ளைசென்றது, சிறைக்கு அல்ல!
போயிருக்கிறான் மலர் பறித்திட!
முட்கள்குத்தி, குருதி சிந்தினும்—
நிறையப்பெறுவான் மணம்சிறை, மலரே!
மாலையாகத் தொடுத்து அவனே—
தமிழ் அன்னைக்கே அளித்துநிற்பான்!
பெருமிதத்தோடு நானும் சென்று,
பிள்ளைஇவன், 'நான் பெற்றபிள்ளை!
இந்திப் பீடையைவிரட்டப் போரிட்டபிள்ளை'என,
அன்னை மகிழக் கூறி நிற்பேன்!
'மகனே,மகனே' என அர்ச்சிப்பேன்!
நாடுகாத்திடும் நற்பணி செய்யா—
பிள்ளைகளெல்லாம் பிள்ளைகள் ஆமோ!
'என்றன் பிள்ளையே பிள்ளை—ஆமாம்,
மற்றதுஎல்லாம் பிள்ளைகள் அல்ல'—என்று,
கூறிக்கூறி மகிழ்வேன், துள்ளி!

8-ம் பக்கத் தொடர்ச்சி

படி அனைவரும் அமைதியுடன் நடந்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

தோழர் முத்து அவர்களும் மற்றவர்களும், பாராட்டுக்கு நன்றி தெரிவித்து உருக்கமுடன் பேசினார்கள். பின்னர், பிற்பகல் 3-30 மணியளவில், ஐவரணி, களம் நோக்கிப் புறப்பட்டது.

அவர்களுக்குத் தலைமைக் கழகச் சார்பில் திரு. என். வி நடராசன் அவர்களும், இராமநாதபுர மாவட்டச் சார்பில் எஸ். எஸ். தென்னரசு அவர்களும், மற்றும் மதுரை மாவட்ட, வட்டக்கழகச் சார்பிலும், நகரக்கிளை, உட்கிளைகள், துணைமன்றங்கள் சார்பிலும் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

அறப்போர்த் தொண்டர்கள் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது பொருளாளர் மு. கருணாநிதி அவர்களும் வந்து கலந்துகொண்டு மாலையணிவித்தார்.

மன்னை. நாராயணசாமி அவர்களும் உடன் வந்திருந்தார்.

கழக அலுவலகத்திலிருந்து அறப்போர்க் களமாக திலகர் திடல்வரை, வீதியின் இருமருங்கிலும், வீடுகளின் திண்ணையிலும், மாடிகளிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் கட்டுக்கடங்காதவகையில் திரண்டு நின்றனர்.

போலீசு உயர்தர அதிகாரிகளும், இரும்புத்தொப்பியணிந்து ஆயுதந்தாங்கி போலீசாரும் ஏராளமாக நின்றிருந்தனர்.

அறப்போர் வீரர்கள், மாலையும் அறப்போர்ச் சின்னமும் அணிந்தவாறு கழகக் கொடி ஒரு கரத்திலும், தீப்பெட்டி மற்றொரு கரத்திலும் ஏந்தி, அரசியல் சட்ட 17-வது பிரிவுடன் களம் நோக்கிப் புறப்பட்டனர்.

"இந்தித் திணிப்புச் சட்டத்தைக் கொளுத்தியே தீருவோம்; இந்தி ஆதிபத்தியம் ஒழிக; தமிழ் வாழ்க; அண்ணா வாழ்க' என விண்ணதிர முழங்கி வீரநடை போட்டுச்சென்றனர்.

இருமருங்கிலும் கூடிநின்ற மக்கள் இதே முழக்கங்களை இடியோசையென எதிரொலித்தனர்; இரு கைகளையும் ஆட்டி அவர்களுக்கு வாழ்த்துக் கூறி வழியனுப்பிவைத்தனர்.

முதலில் அறப்போர் வீரர்கள் ஐவர் செல்ல அவர்களைப் பின்தொடர்ந்து போலீசு அதிகாரிகள் சென்றனர். செய்தியாளர்கள் மட்டும் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றனர்; மற்ற எவரும் அவர்கள் அருகில் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

அடுத்து சிறிது தொலைவில் தோழர்கள் மு. கருணாநிதி, என். வி. நடராசன், எஸ். எஸ். தென்னரசு, எம். எஸ். இராமசாமி மற்றும் முன்னணித் தோழர்கள் பின்தொடர்ந்து சென்றுகொண்டிருந்தனர்.

மறியல் களமான திலகர் திடலில் முன்கூட்டியேஎவரும் அங்கு செல்லாதபடி-காலியாக வைக்கப்பட்டிருந்தது.

திலகர் திடல் வாயிலையடைந்ததும், பின்தொடர்ந்துவந்த முன்னணித் தோழர்களையும், பிறரையும் அங்கேயே தடுத்து நிறுத்திவிட்டனர் போலீசார். ஐவரை மட்டுமே உள்ளே செய்ய அனுமதித்தனர்.

ஐவரும், உள்ளே சென்று, மேடை மீது ஏறி, 'இந்தி ஒழிக; தமிழ் வாழ்க; அண்ணா வாழ்க' என்ற முழக்கத்துடன், நெருப்புக் குச்சியை நெருப்புப் பெட்டியுடன் உரைத்துத் தீ ஏற்படுத்தி, அந்தத் தீயை அரசியல் சட்ட 17-வது பிரிவுக்கு வைத்துக்கொளுத்தினர் அதுவரை அருகிலேயே போலீசு அதிகாரிகள் பார்த்துக்கொண்டு நின்றிருந்தனர்.

தீ வைப்பதற்குமுன், தொண்டர்கள் கையில் இருந்தது அரசியல் சட்டப் பிரிவுதானா என்பதையும் வாங்கிப் பார்த்துத் தெரிந்துகொண்டனர்.

சட்டப் பிரிவின் சரிபாதியை நெருப்பு விழுங்கிவிட்டது. இந்த நேரத்தில், அவர்களைக் கைது செய்திருப்பதாகப் போலீசு அதிகாரிகள் கூறினர்.

உடன், அவர்கள் கையிலிருந்த நெருப்புப் பெட்டியையும், கொடிகளையும், பாதி எரிந்து சாம்பலான சட்டப் பிரிவையும், சாட்சியத்திற்காகக் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்டபோது, தொலைவில் நின்று பார்த்துக்கொண்டிருந்த மக்கள், 'இந்தி ஒழிக; அறப்போர் வீரர்கள் வாழ்க; அண்ணா வாழ்க' என முழக்கமிட்டனர்.

இந்த நிகழ்ச்சி முடிந்ததும், போலீசார், கூடியிருந்து முழக்கமிட்ட மக்களைக் கலைந்து செல்லுமாறு விரட்டினர்.

இந்த நேரத்தில், கட்டுக்கடுங்காத கூட்டத்தினர், போலீசாரின் மிரட்டலைக் கண்டு அங்குமிங்கும் ஓடுகையில், கால் தடுமாறி விழுந்தும், ஒருவர்மீது ஒருவர் சாய்ந்தும், தொல்லைகளுக்காளானார்கள்.

வடக்குவெளி வீதியில் ஓர் இடத்தில், கூடிநின்று முழக்கமிட்ட மக்கட்கூட்டத்தை, போலீசார் தடியடிசெய்து கலைத்திருக்கின்றனர். இதனால் சிலருக்குக் காயம் ஏற்பட்டதாகவும் தெரிகிறது.

மறியல் வீரர்கள் கைது செய்யப்பட்ட செய்தி காட்டுத் தீ போல் நகரெங்கும் பரவியது. நகரமே பரபரப்பில் ஆழ்ந்தது.

மறியல் தொண்டர்களைப் பின் தொடர்ந்துவந்த பொதுமக்களைப் போலீசார் தடுத்து நிறுத்திய நேரத்தில், மிகவும் ஆத்திரமடைந்தனர்; கலைஞர் கருணாநிதி அவர்களும், என். வி. நடராசன் அவர்களும் கையைக் காட்டி, அமைதிகாக்குமாறு வேண்டிக்கொண்டதன் பேரில் அனைவரும் பொறுமையுடன், எவ்வித அசம்பாவிதச் செயலுக்கும் இடம் கொடுக்காமல் நடந்துகொண்டனர்.

கைதான ஐவரணியினர் மதுரை மத்திய சிறையில் 15 நாள் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

பதிவு எண்: 7178 | திராவிடன் | தொலைபேசி 33581

அரசியல்சட்டப்பிரிவுக்கு எரியூட்டப்பட்டது!

அறிஞர் அண்ணா தம்பிகள் சிறையில் இன்று 36-வது நாள்!

மதுரையில் எஸ். முத்து மற்றும் மாவீரர் நால்வர் கைது



அரசியல் சட்ட (மொழிபற்றிய) 17-வது பிரிவுக்கு, 16-12-63 அன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில்—போலீசு அதிகாரிகள் கண்ணெதிரில் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது!

மதுரை மாவட்டச்செயலாளர் எஸ். முத்து எம்.சி. அவர்கள் தலைமையில் தோழர்கள் மு. காதர்சா பி.எ. (திண்டுக்கல் வட்ட தி. மு. க. செயலாளர்), ஆ. முனியாண்டி (மதுரை மாவட்ட தி. மு. க. உறுப்பினர்), அக்கினிராசன் பி.ஏ. (மதுரை தி. மு. க. உறுப்பினர்), பாகனேரி சி. திருஞானம் (சிவகெங்கை வட்ட தி. மு. க. செயலாளர்) ஆகியோர் அரசியல் சட்டப் பிர்வுக்குத் தீயிட்டுக் கொளுத்தினர்கள்.

சட்டப் பிரிவின் சரிபாதி தீக்கிரையாகும்வரை பார்த்துக் கொண்டிருந்த போலீசு அதிகாரிகள், அதன்பின், தீயிட்ட ஐவரையும் கைது செய்தனர்; அவர்கள் கையில் இருந்த தீப்பெட்டியையும், தீக்கிரையாகி அரைகுறையாக இருந்த சட்டப் பிரிவையும் கழகக் கொடியையும் கைப்பற்றிக் கொண்டு, தோழர்களை லாரியில் ஏற்றிச்சென்றனர்.

சட்டப் பிரிவு எரிப்பு அறப் போரைக் காண நகர மக்களும், மதுரை, இராமநாதபுர மாவட்டங்களின் பல பகுதிகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கில்வந்து குழுமியிருந்தனர்.

தலைமைக்கழகச் சார்பில் வந்திருந்த என். வி. நடராசன் அவர்கள், அறப்போர்த் தொண்டர்களுக்கு மாலையணிவித்து வாழ்த்தி வழியனுப்பிவைத்தார்.

தொண்டர்கள் அறப்போர்க் களம் நோக்கிப் புறப்படுகையில் தலைமைக்கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்களும் வந்து கலந்துகொண்டு மாலையணிவித்து அவர்களுடன் தொடர்ந்து வந்து நிகழ்ச்சியைப் பார்வையிட்டனர்.

மற்றும், தஞ்சை மாவட்டச் செயலாளர் மன்னை. நாராயணசாமி, இராமநாதபுர மாவட்டச் செயலாளர் எஸ். எஸ். தென்னரசு, அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி, சிவ. சண்முகசுந்தரம், உ. பில்லப்பன் எம்.ஏ. மற்றும் மதுரை மாவட்ட, வட்டக் கழகங்களின் முக்கிய நிர்வாகிகள் ஆகியோரும் முன்னின்று, அமைதி காத்தனர்.

சென்னையில் நடந்த இந்தி எதிர்ப்புப் பொதுமாநாட்டின் தீர்மானப்படி, இந்தி எதிர்ப்பு அறப்போரின் இரண்டாவது கட்டமாக, மதுரையில் நேற்று அரசியல் சட்ட மொழிப் பிரிவு எரியூட்டப்பட்டது.

சென்னையில் நடந்தது போலவே மதுரையிலும், சட்டப் பிரிவை எரிப்பதற்கு முன்பே ஐவரணி கைது செய்யப்பட்டுவிடும் என்று சில நாட்களாக வதந்தி நிலவியது.

பின்னர், சனிக்கிழமையன்றே, மதுரை முத்து அவர்களும், மற்ற நால்வரும் கைது செய்யப்பட்டுவிட்டதாகவும் ஓர் வதந்தி பரவியது. இதையடுத்து நகரில் பெரும் பரபரப்பு நிலவியது. ஆனால் முன் கூட்டி எவரும் கைது செய்யப்படவில்லை.

மன்னை நாராயணசாமி பொறுப்பில்விடுதலை

தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் மன்னை. ப. நாராயணசாமி அவர்கள் 16—12—63 அன்று மதுரையில் நடந்த அரசியல் சட்டப் பிரிவு எரிப்புப் போருக்கு, அறப்போர் தொண்டர்களைப் பின் தொடர்ந்து, தோழர்கள் மு. கருணாநிதி, என். வி. நடராசன், தென்னரசு முதலியோருடன், மன்னை நாராயணசாமியும் நடந்து சென்று கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் போலிசார், தோழர் நாராயணசாமியை மட்டும் தடுத்து நிறுத்திக் கைது செய்திருக்கின்றனர்.

இதைக் கண்டதும் தோழர்கள் கருணாநிதியும், என். வி. நடராசன் அவர்களும் மாவட்டத் தலைமைப் போலீசு அதிகாரியை அணுகி, நாராயணசாமி தங்களுடன் வந்தவர் என்றும், அவரைக் கைது செய்தது சரியல்ல என்று எடுத்துக் கூறி, விடுதலை செய்யுமாறு வாதாடினர்; ஆனாலும் அதிகாரி அதற்கு இணங்க மறுத்துவிட்டார்.

போலீசு லாரியில் மன்னை நாராயணசாமி ஏற்றிச் செல்லப்பட்டார். அவர் மீது இ.பி.கோ. 143, 188 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தோழர் நாராயணசாமியை 15 நாள் காவலில் வைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

எரிப்புப் போருக்கு எவ்விதத் தொடர்பும் இல்லாத வகையில் மன்னை நாராயணசாமி கைது செய்யப்பட்டதால் அவரை (அண்ணா அறிக்கைப்படி) பொறுப்பில் விடுவிக்க கருணாநிதியும், என். வி. நடராசனும் முடிவு செய்தனர்.

அதன்படி, கழக வழக்கறிஞர்களான பி.எஸ். மணியம் திருப்பதி, காவேரிமணியம் ஆகியோர் மாஜிஸ்திரேட்டை அணுகினர். பின்னர், 18—12—63 அன்று தோழர் மன்னை நாராயணசாமி அவர்கள் பொறுப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அறப்போரைக் கண்காணிக்கும் பொருட்டுத் தலைமைக் கழகத்தின் சார்பில், திரு. என். வி. நடராசன் அவர்கள், சனிக்கிழமை காலை இங்கு வந்து சேர்ந்தார். தோழர்கள் எஸ். எஸ். தென்னரசு, எம். எஸ். இராமசாமி, பில்லப்பன் முதலான இராமநாதபுரம் மாவட்டத் தோழர்களும் வந்திருந்தனர்.

மதுரை மாவட்ட தி. மு. க. அலுவலகம் (66, மேலக்கோபுர வீதி) எதிரிலும், நகரின் பிற பகுதிகளிலும் ஏராளமான போலீசார் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். அறப்போரில் கலந்து கொள்ளும் ஐவரணியினரும், கழக அலுவலகத்திலேயே தங்கியிருந்தனர்.

களம்புகுந் தோழர்களுக்கு கழக அலுவலகத்திலேயே, 15—12—63 காலை பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. அமைப்புச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், ஐவருக்கும் மாலையணிவித்து, அவர்களின் தொண்டுகளைப் பாராட்டிப் பேசினார்.

அவர் தம் உரையில், தோழர் முத்து அவர்களின் சிறந்த பணிகளைப் பாராட்டியதுடன், முத்து அவர்கள் சிறையில் இருக்கும் போது வெளியில் உள்ள மற்ற தோழர்கள், முத்து அவர்கள் விட்டுச்செல்லும் பணிகளை ஏற்று, அவர் விடுதலையாகி வரும்போது பலமடங்கு கழகம் வளர்ச்சி பெற்றிருக்கும் நிலையை உருவாக்கிக் காட்டவேண்டும் என்றும் அண்ணா அவர்களின் கட்டளைப்

(7-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகீம் சேட் தெரு, சென்னை-1